# முதல் இடைப்பருவத் தேர்வு - 2018

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு------ கணக்குப்பதிவியல்

**காலம் : 1½ மணி நேரம்** **மதிப்பெண்கள் : 50**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :**

1. கணக்காண்டு இறுதியில் விற்காமல் உள்ள சரக்கின் மதிப்பு --------
   அ) தொடக்க சரக்கிருப்பு ஆ) இறுதிச் சரக்கிருப்பு இ) தொடக்க முதல்
2. செலவுகள் முன்கூட்டியே செலுத்தப்பட்டிருப்பின் அவை --------- செலவுகள் எனப்படும்.
   அ) கொடுபடவேண்டிய ஆ) பெறவேண்டிய இ) பயன்தீரா
3. கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டி வியாபாரத்திற்கு ஒரு ------------ஆகும்
   அ) செலவினம் ஆ) வருமானம் இ) சொத்து
4. 31.3.2004 - ஆம் நாளைய இருப்பாவின்படி அறைகலன் மதிப்பு ₹.60,000. அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டிய தொகை ----------
   அ) ₹. 6,000 ஆ) ₹. 600 இ) ₹. 54,000
5. இருப்பாய்வில் வரவு பக்கத்தில் தரப்பட்டிருக்கும் அநாமத்துக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பில் ------ பக்கத்தில் தோன்றும்.
   அ) சொத்து ஆ) பொறுப்பு இ) சொத்து மற்றும் பொறுப்பு
6. நிலை அறிக்கை முறையை, நிகரமதிப்பு முறை எனவும் --------- முறை எனவும் அழைக்கப்படும்
   அ) மாற்றுதல் முறை ஆ) முதல் ஒப்பீட்டு இ) இருப்பு நிலைக்குறிப்பு
7. கீழ்கண்டவற்றில் எது சரியானது?
   அ) மொத்த விற்பனை = ரொக்க விற்பனை - கடன் விற்பனை
   ஆ) ரொக்க விற்பனை = மொத்த விற்பனை + கடன் விற்பனை
   இ) கடன் விற்பனை = மொத்த விற்பனை - ரொக்க விற்பனை
8. ஒரு தொழில் உரிமையாளரின் மொத்தச் சொத்துகள் ₹.5,00,000 ; அவருடைய பொறுப்புகள் ₹.3,50,000 அவருடைய முதல் ------- ஆகும்.
   அ) ₹. 1,50,000 ஆ) ₹. 8,50,000 இ) ₹. 5,00,000
9. முழுமை பெறாத பதிவேடுகளைப் பயன்படுத்தும் நிறுவனம்
   அ) சிறு வியாபாரிகள் ஆ) நிறுமங்கள் இ) அரசு
10. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு -------
    அ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கு ஆ) மொத்தக் கடனாளிகள் கணக்கு
    இ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு

## பகுதி --- II

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 11- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4 × 2 = 8

11. ஒற்றைப் பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக.
12. முன் கூட்டி பெற்ற வருமானம் என்றால் என்ன ?
13. எடுப்பு மீது வட்டி ₹. 2,500 . சரிகட்டுப் பதிவு தருக.
14. பின்வரும் விவரங்களிலிருந்து வியாபார கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,000 | கூலி | 500 |
| கொள்முதல் | 24,000 | விற்பனை திருப்பம் | 100 |
| விற்பனை | 13,000 | இறுதி சரக்கிருப்பு | 65,000 |

15. 01.04.2016 அன்று பற்பல கடனாளிகள் ₹. 49,600. 31.03.02017 அன்று பற்பல கடனாளிகள் ₹. 59,900. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ₹. 69,500. எனில், அவ்வாண்டில் கடன் விற்பனை எவ்வளவு?
16. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடுக.
    தொடக்க முதல் ₹. 70,000 ; எடுப்பு ₹. 5,000 ; இறுதிமுதல் ₹. 75,000 ; கூடுதல் முதல் ₹.17,500

## பகுதி --- III

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 18 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 4 × 3 = 12

17. சரிக்கட்டுப் பதிவு என்றால் என்ன?
18. முழுமை பெறாபதிவேடுகள் என்றால் என்ன்?
19. பின்வரும் விவரங்களிலிருந்து இலாப நட்டக் கணக்கினை தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| அறைகலன் | 70,000 | அளித்த தள்ளுபடி | 1,500 |
| வெளிஏற்றிச்செல் செலவு | 500 | கழிவு பெற்றது | 2,000 |
| சம்பளம் | 1,500 | மொத்த இலாபம் | 1,18,600 |

குறிப்பு : அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்குக.

20. வியாபார கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 5,700 | கொள்முதல் திருப்பம் | 900 |
| கொள்முதல் | 1,58,000 | விற்பனை திருப்பம் | 600 |
| விற்பனை | 2,62,000 | இறுதி சரக்கிருப்பு | 86,000 |

21. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு, பற்பல கடனாளிகளின் இறுதி இருப்பைக் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனாளிகள்(தொடக்கம்) | 17,425 | ரொக்கம் பெற்றது | 49,200 |
| அளித்த தள்ளுபடி | 4,300 | விற்பனைத் திருப்பம் | 3,700 |
| கடன் விற்பனை | 60,075 | ரொக்க விற்பனை | 8,000 |

22. ஒற்றைப் பதிவு முறைக்கும், இரட்டைப் பதிவு முறைகுமுள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 3)

## பகுதி --- IV

எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 × 5 = 20

23. 31 – 03 – 2017 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ₹. 1,25,000
    சரிக்கட்டுதல்கள் :
    i) ₹. 5,000 வாராக் கடன் போக்கு எழுதுக.
    ii) பற்பல கடனாளிகள் மீது 10 % வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
    iii) கடனாளிகள் மீது 2 % தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

( அல்லது )

திரு. மணி அவர்கள் ₹. 1,20,000 முதலுடன் 1.04.2017 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ₹. 1,000 வீதம் தனது சொந்த செல்விற்கு எடுத்துக் கொண்டார்.மேலும் அவர் ஆண்டிடையில் ₹. 20,000 கூடுதல் முதல் இட்டார். ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். அவருடைய 31.3.2018 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| விவரம் | தொகை ₹ |
|---|---|
| வங்கி இருப்பு | 8,000 |
| பற்பல கடனாளிகள் | 50.000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| அறைகலன் | 2,500 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 1,000 |
| கை ரொக்கம் | 2,000 |

அவர் தனது கணக்குகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2016 – 2017 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிக.

24. கீழ்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகளும், மாற்றுப் பதிவுகளும் தருக.

i) கொடுபடவேண்டிய கூலி ₹. 15,000

ii) இறுதிச் சரக்கிருப்பு ₹.6,00,000

iii) காப்பீட்டு முனைமம் முன்கூட்டி பெற்றது ₹.1,000

( அல்லது )

கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு 31.03.2015 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்டக் கணக்கினை தயார் செய்க.

| விவரம் | 31.03.2014 ₹ | 31.03.2015 ₹ |
|---|---|---|
| ரொக்க இருப்பு | 12,500 | 19,750 |
| பற்பல கடனாளிகள் | 1,25.000 | 1,75,000 |
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

<u>மற்ற விவரங்கள்</u> :

| | | | |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ₹. 2,35,000 | பல்வகைச் செலவுகள் | ₹.17,750 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | ₹. 2,80,000 | எடுப்புகள் | ₹. 20,000 |

25. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து திரு. ராஜா என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபர இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | மாத சம்பளம் | 2,600 |
| கொள்முதல் | 3,300 | முதல் | 52,000 |
| விற்பனை | 7,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கூலி | 2,700 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 7,500 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | இறுதிச் சரக்கிருப்பு | 4,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 52,000 | கடனீந்தோர் | 500 |



( அல்லது )

தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 | பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 5,90,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 | அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 | உள்திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 | இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 | ரொக்கக் கொள்முதல் | 25,000 |

26. பின்வரும் விவரங்களிலிருந்து 2010 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார இலாபநட்ட கணக்கினைத் தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| முதல் | 20,000 | ஊதியம் | 6,600 |
| கடனாளிகள் | 8,000 | வங்கிரொக்கம் | 2,400 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 12,000 | எடுப்புகள் | 4,800 |
| கடனீந்தோர் | 10,500 | அலுவலகச் செலவுகள் | 4,500 |
| கொள்முதல் | 60,000 | பொதுச் செலவுகள் | 2,300 |
| விற்பனை | 80,000 | பெற்ற கழிவு | 600 |

<u>சரிக்கட்டுதல்கள்</u> : அ) இறுதிச் சரக்கிருப்பு ₹.14,000 ஆ) கொடுபடவெண்டிய சம்பளம் ₹.600

( அல்லது )

கீழ்க்கானும் விவரங்களைக் கொண்டு திரு. ரமேஷ் அவர்களின் 2016 டிசம்பர் 31 ஆம் நாளைய வியாபார கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | தொகை ₹. | விவரம் | தொகை ₹. |
|---|---|---|---|
| முதல் | 13,000 | கடனாளிகள் | 4,250 |
| கடனீந்தோர் | 2,100 | அறைகலன் | 200 |
| கையிருப்பு ரொக்கம் | 2,045 | பெறவேண்டியகழிவு | 500 |
| நிகரலாபம் | 2,395 | கட்டடம் | 4,500 |
| தொடக்சரக்கிருப்பு | 5,000 | இறுதிச்சரக்கிருப்பு | 6,000 |
| கொள்முதல் | 18,000 | விற்பனை | 30,000 |